மோசமான வீழ்ச்சியை நோக்கி தேசத்தின் பொருளாதாரப் போக்கு

உதயன்

ஆசிரியர் தலையங்கம்

'கழுதை தேய்ந்து கட்டெறும்பானது மாதிரி' - 'உலக்கை தேய்ந்து உளிப்பிடியானமை போல'- இலங்கையின் பொருளாதாரம் குட்டிச்சுவராகிப் போய் நாடு பெரும் நெருக்கடியை எதிர்கொள்ளப் போகின்றது என்ற நெருடலான செய்தியை நாசூக்காகத் தெரிவித்திருக்கின்றது உலகவங்கி.

நாட்டின் பொருளாதார வளர்ச்சி வீதம் இந்த ஆண்டில் - 2008 இல் - 7.5 வீதமாக இருக்கும் என இலங்கையின் பொருளாதாரப் பண்டிதர்கள் எதிர்வு கூறிய நிலையில் அது இப்போது 6 வீதத்தைக் கூட எட்டவில்லை என்று சில வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், நிதி அமைச்சர் என்ற முறையில் கடந்த மாதம் நாடாளுமன்றத்தில் அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை சமர்ப்பித்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தமது அரசின் 'சிறந்த' பொருளாதாரத் திட்டங்கள் காரணமாக நாட்டின் பொருளாதார அபிவிருத்தி வீதம் 2009 இல் 7.5 வீதமாக இருக்கும் என்று பீற்றியிருந்தார்.

ஆனால் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதம் இந்தத் தசாப்தத்தில் மிக மோசமான கட்டத்தை எட்டி, அது 2009 இல் 4 வீதத்துக்கு வீழ்ச்சியடையும் என்ற அதிர்ச்சித் தகவலை உலகவங்கி நேற்று முன்தினம் விடுத்திருக் கின்றது. '2009 ஆம் ஆண்டிற்கான பூகோள பொருளாதார சாத்தியங்கள்' என்ற தனது அறிக்கையிலேயே இலங்கையின் பொருளாதார வளர்ச்சிவீதம் 2008 இல் 6.3 இல் இருந்து 2009 இல் 4 வீதமாக வீழ்ச்சியடையும் என்று மதிப்பீடு செய்திருக்கின்றது உலக வங்கி.

'உலக ரீதியாக ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடிகளின் பின்புலத்தில் இலங்கை நிலைமை குறித்து மதிப்பாய்வு செய்து, எங்களின் எதிர்வுகூறல்களை எதிர்வரும் ஜனவரி இரண்டாம் திகதி வெளிப்படுத்துவோம்.' - என இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நிவார்ட் கப்ரால் கூறுகின்றார். அவரும் அவரது மத்திய வங்கிப் பொருளாதார நிபுணர்களும் மணலைக் கயிறாகத் திரித்தாலும் கூட பொருளாதார விடயத்தில் மரண அடியை எதிர்நோக்கவிருக்கும் இலங்கையை அதிலிருந்து மீட்பதோ, காப்பதோ இயலாத காரியம் என விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

ஐரோப்பிய நாடுகள் இதுகாறும் இலங்கைக்கு வழங்கிவந்த 'ஜி.எஸ்.பி.பிளஸ்' என்ற ஏற்றுமதிச் சலுகை நீடிக்கப்படுமா என்ற விடயம் அந்தரத்தில் ஊசலாடிக் கொண்டிருக்கின்றது. மனித உரிமை களைத் துச்சமாக மதித்து, காட்டுத் தர்பார் நடத்திவரும் இந்த அரசுக்கு அத்தகைய பொருளா தாரச் சலுகையை ஐரோப்பிய நாடுகள் தொடர்ந்து நீடிக்கப்போவதில்லை என்பது பொதுவான கருத்து. ஏற்கனவே நாட்டின் ஏற்றுமதிச் சந்தை நெருக்கடிகளை எதிர்கொண்டு தள்ளாடிக் கொண்டிருக்கின்றது. 'ஜி.எஸ். பி. பிளஸ்' சலுகையை ஐரோப்பிய ஒன்றியம் நிறுத்தும்போது - அது பெரும்பாலும் அடுத்த ஆண்டு முற்பகுதியில் இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது - தற்போது தள்ளாடும் நாட்டின் பொருளாதாரம் நிரந்தரமாகப் படுத்துவிடும்.

ஏற்றுமதிப் பெறுமதி குறைந்து ஏற்றுமதிக்கும் இறக்குமதிக்கும் இடையிலான பெறுமதி வேறு பாடு வேகமாக அதிகரித்துவரும் இச்சமயத்தில், வெளிநாட்டு நாணயச் சேமிப்பும் கரைந்து வருகின்றது. டொலருக்கு எதிரான ரூபாவின் பெறுமதியை செயற்கைத் தனமாகத் தொடர்ந்து பேணுவதற்காக தனது நாணயச் சேமிப்பை அதிகம் கரைத்து வருகின்றது மத்திய வங்கி.

பணவீக்கம் அதிகரித்து, வாழ்க்கைச்செலவு எகிறி, சகல மட்டங்களிலும் பொருளாதார நெருக்கடி வீங்கிப் பருத்து வருகின்றது.

நிலைமையைச் சமாளித்து, அரசின் அன்றாட காரியங்களைத் தொடர்வதற்காக கண்மூடிக் கொண்டு அரசு விதிக்கும் வரிகள் பொருளாதாரத் தில் எதிர்மறை விளைவுகளையும் தாக்கங்களை யும் ஏற்படுத்தி வருகின்றன.

இத்தகைய பொருளாதார வீழ்ச்சி அல்லது நெருக்கடி என்பது தென்னாசிய வட்டகைக்கு இன்றைய நிலையில் பொதுவானது என்றாலும், இலங்கை அந்தப் பொது நிலையையும் விட மோச மான பின்னடைவுகளைச் சந்திக்கப் போகின்றது என்பதுதான் கவனிக்க வேண்டிய விடயமாகும்.

தென்னாசிய வட்டகையில் 6.3 வீதமாக இருந்த இந்தப் பொருளாதார வளர்ச்சி வீதம் அடுத்த ஆண்டில், 2009 இல், 5.8 வீதமாக வீழ்ச்சியடையப் போகின்றது என்று எதிர்வு கூறப்படுகின்றது. ஆனால் இலங்கையில் அது அடுத்த ஆண்டில் நான்கு வீதத்தை எட்டுவது கூட துர்லபமே என்று எச்சரிக்கப்படுகின்றது.

இலங்கை இத்தகைய மோசமான கட்டத்தை எட்டுவதற்கு 'மஹிந்த சிந்தனை' அரசின் பொறுப்பற்ற போக்கும், தெளிவற்ற கொள்கை களும், தூரநோக்கற்ற திட்டங்களும், பேரின வாதச் சிந்தனையில் அமைந்த செயற்பாடுகளுமே பிரதான காரணங்கள் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

பௌத்த - சிங்கள மேலாண்மையை நிலை நிறுத்துவதற்காகத் தனது இலங்கைத் தீவின் வளம் கொழிக்கும் பிரதேசம் மீது பெரும் போரைத் தொடுத்து, தனது தேசப் பொருளாதாரத்தைக் கரியாக்கும் சிங்கள அரசு, மறுபுறத்தில் அந்தப் போரியல் கொடுரத்தால் வளத்தையும் அபிவிருத்தி யையும் நாசமாக்கித் தீவைக் குட்டிச்சுவராக்கி நிற்கின்றது.

போரும் அதன் பேரழிவுக் கொடுரங்களும் நாட்டை ஒருபுறம் நாசப்படுத்துகின்றன என்றால் மறுபுறம் தூரநோக்கற்ற பொருளாதார முயற்சி களும், ஊழல், மோசடிகள், முறையற்ற செயற்பாடு கள் நிறைந்த ஆட்சி நடவடிக்கைகளும் நாட்டின் பொருளாதார நிலையை நடு வீதிக்குக் கொண்டு வந்து விட்டன.

'யுத்த வெற்றி' என்ற மாயையில் - பகல் கனவில் - மூழ்கிக் கிடக்கும் தென்னிலங்கைச் சிங்களத் துக்கு, பொருளாதார நெருக்கடி சூடு காய்ச்சிய இரும்புக்கோல் போலப் படும்போதுதான் அதன் வேதனை துணுக்கென உறைக்கும்.

ஆனால் அச்சமயம், மீளமுடியாத பெரும் அதலபாதாள நெருக்கடிக்குள் நாட்டின் பொருளாதாரம் வீழ்ந்து புதைந்து விட்டிருக்கும் என்பது நிச்சயம்.

அடிமையாவதோ? பகைவன் பிடியில் மாள்வதோ? - தமிழா ஆண்மை இல்லையோ? உரிமையில் ஆசை இல்லையோ?

Sri Lanka among top eight countries undergoing genocidal conflict

[United Nations] Genocide and other mass atrocities are underway or risk breaking out in at least 33 countries, says a new comprehensive watch list slated for release Tuesday - the 60th anniversary of the United Nations prevention of genocide convention.

As reports indicate UN peacekeeping efforts are in crisis amid dwindling contributions of both cash and well-trained forces, the authors of the new study call for an international focus on genocide prevention in countries they've identified.

Since the world pledged "never again" in the wake of the Holocaust, Cambodia, Rwanda and Bosnia-Herzegovina are but three examples of places where mass slaughter has occurred.

The list by the New York-based Genocide Prevention Project for the first time combines the findings of five leading independent watch lists to create a "watch list of watch lists."

"Red alert" countries include Afghanistan and Iraq alongside commonly known regions currently experiencing genocidal conflict such as Sudan's Darfur and the Democratic Republic of the Congo. These and Myanmar, Pakistan, Somalia and Sri Lanka all made the list's top eight because they appear in each of the five "expert" indexes.

The next 25 "orange alert" countries appear in at least three of the indexes and include China, Colombia, Philippines and Indonesia as places where ongoing or simmering violence could flare to genocidal proportions.

Since the world pledged "never again" in the wake of the Holocaust, Cambodia, Rwanda and Bosnia-Herzegovina are but three examples of places where mass slaughter has occurred.

"It is possible to identify early indicators of mass atrocity crimes. But what happens now is the international community sees what's going on, gets paralyzed and, if it acts, really only acts after the fact," said Jill Savitt, project executive director.

"You don't see assertive proactive diplomacy in the earliest possible moments, when the bloodshed isn't widespread or before arms have come into the region."

The report says prudent application of "carrots and sticks" - which it describes as the panoply of economic, diplomatic and legal measures available to nations and the UN Security Council - can result in "averting an escalation of violence."

Savitt said what's been lacking in the past was "political will," but added that may change because of a convergence of recent factors.

One is the stated determination of Susan Rice, U.S. president-elect Barack Obama's choice for U.S. ambassador to the UN, to prevent future genocides after witnessing the after-effects of the 1994 Rwanda slaughter.

Another is current discussion around the 60th anniversary of the genocide prevention convention, which calls on countries to prevent and punish actions of genocide. Finally, there is what Savitt called the public "guilt" over what occurred in Rwanda and Bosnia, and what she additionally called public "hunger for a response" to the Darfur crisis.

"There are things states can do like dispatching the highest-level envoy - someone of great stature who can call (British Prime Minister Gordon Brown's residence) 10 Downing Street, or the UN secretary general, or President Obama," she said. "There are all kinds of penalties and inducements, including trade and aid, membership in political bodies, or expulsion from them. And even simple public criticism can work.

"Still, many analysts agree the international community has long had difficulty trying to change state behaviour purely using sanctions or diplomatic pressure.

Myanmar, Pakistan, Somalia and Sri Lanka all made the list's top eight because they appear in each of the five "expert" indexes

Among countries in the project's list of 33, Iran, Myanmar, North Korea, Somalia, Sudan and Zimbabwe all face varying UN or state sanctions aimed at convincing them to obey the international will.

The list comes as Irwin Cotler, former justice minister and attorney general, Monday released a petition calling on countries that have signed the genocide convention to "hold Iran to account for its genocidal incitement."

"The enduring lesson of the Holocaust and that of the genocides that followed is that they occurred not simply because of the machinery of death, but because of the state-sanctioned incitement to hatred," Cotler said.

"In the case of Iran, there is no justification for inaction," he added, citing statements by Iranian leaders calling for the destruction of Israel.

(Canwest News)